


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## டிசம்பர் - 2019

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## டிசம்பர் - 09.12.2019

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- சர்வதேச நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- முக்கிய தினங்கள்










## தமிழக நிகழ்வுகள்

- புதுச்சேரி அஞ்சல் கோட்டத்தில் அனைத்து மகளிர் அஞ்சல் அலுவலகம் தொடங்கப்பட்டுள்ளது.
    - சென்னை நகர மண்டலத்தின் கீழ் இரண்டாவது அனைத்து மகளிர் அஞ்சல் அலுவலகம் தொடங்கப்பட்டுள்ளது.
    - இந்த அலுவலகம் புதுச்சேரி ஸ்ரீ அரவிந்தர் ஆசிரமம் அஞ்சல் நிலையத்தில் தொடங்கப்பட்டுள்ளது.
    - **செய்தி துளிகள்:**
        - **உலகின் மிகப்பெரிய அஞ்சல் நெட்வொர்க் கொண்ட அமைப்பாக இந்திய அஞ்சல் துறை விளங்குகிறது.**
        - இந்தியாவின் முதல் அனைத்து மகளிர் அஞ்சல் அலுவலகம் தில்லி சாஸ்திரி பவன் அஞ்சல் நிலையத்தில் 2013-ம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
        - சென்னை நகர மண்டலத்தின் முதல் அனைத்து மகளிர் அஞ்சல் நிலையம் சென்னை எத்திராஜ் சாலையில் 2013-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.

We Shine Academy™

## தேசிய நிகழ்வுகள்

- **பைகா கிளர்ச்சி நினைவிடத்துக்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அடிக்கல் நாட்டினார்.**
    - ஒடிஸா தலைநகர் புவனேசுவரத்தில் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.
    - கஜபதி பேரரசின் ஆட்சி காலத்தில் 1817-ம் ஆண்டு பிரிட்டிஷார் ஒடிஸாவில் நில அபகரிப்பு செய்த போது பைகா

சமூகத்தினர் கிளர்ச்சி செய்தனர்.

- **செய்தி துளிகள்**
  - பக்ஷி ஜகபந்து என்பவர் தலைமையில் விவசாயிகள், தொழிலாளர்கள் உள்ளிட்டோர் கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளனர்.
  - பைகா கிளர்ச்சியின் 200-ஆவது ஆண்டையொட்டி சிறப்பு அஞ்சல் தலையை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.
  - ஒடிஸா மாநில - ஆளுநர் - கணேஷிலால்

- **நாடு முழுவதும் தினமும் சேகரிக்கப்படும் குப்பைகளில் 57% குப்பைகள் மட்டுமே மறுசுழற்சிக்கு அனுப்பபடுவதாக மத்திய அரசு தகவல்.**
  - மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்புற மேம்பாட்டு துறை அமைச்சகம் இந்த தகவலை வெளியிட்டுள்ளது.
  - தினமும் 1.48 லட்சம் டன் குப்பைகள் சேகரிக்கப்படுவதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.
  - **செய்தி ளிகள்**
    - நாடு முழுவதும் மொத்தம் 84,000 நகராட்சிகள் உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
    - இந்தியாவில் மொத்தம் 79,000 நகராட்சிகளில் “தூய்மை இந்தியா’ திட்டத்தின் கீழ் வீடுகளுக்கே சென்று குப்பைகள் சேகரிக்கப்படுகின்றன.
    - தூய்மை இந்தியா திட்டம் 2014-ஆம் ஆண்டு அக்டோபர் 2-ம் தேதி தொடங்கப்பட்டது.

We Shine Academy™

## சர்வதேச நிகழ்வுகள்

- சீனாவில் வழக்குகளை விரைந்து முடிப்பதற்காக இணையவழி நீதிமன்றங்கள், செயற்கை நுண்ணறிவு நீதிபதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.
    - முதல் கட்டமாக 12 மாகாணங்களில் இவ்வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.
    - சீனாவின் பிரபலமான **“வீ-சாட்”** சமூக வலைதளம் மூலம் இணைய வழி நீதி மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
    - **செய்தி துளிகள்**
        - சீனக் குடியரசின் தண்டனைச் சட்டம் 1935-ம் ஆண்டு ஹோ டாங் சான் என்பவரால் வெளியிடப்பட்டது.
        - **சீன அதிபர் - ஜீ ஜிம்பிங்**
        - சீனா ஒரு கட்சி அமைப்பு கொண்ட நாடாகும்.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **ரோஜர் பெடரருக்கு ஸ்விட்சர்லாந்து அரசு வெள்ளி நாணயம் வெளியிட்டுள்ளது.**
    - 2020 ஆம் ஆண்டு மே மாதம் 50 பிராங்க் மதிப்பு கொண்ட பெடரின் உருவம் பதித்த தங்க நாணயம் வெளியிட அரசு முடிவு செய்துள்ளது.
    - உலகிலேயே அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவர் என்ற பெருமையை ரோஜர் பெடரர் பெற்றுள்ளார்.
    - **தேர்வுத் துளிகள்**

- ரோஜர் பெடர் மொத்தம் 20 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார்.
- ஸ்விஸ் மிண்ட் எனப்படும் வெள்ளி நாணயத்தில் உருவப்படம் வெளியிடப்பட்டுள்ளது.
- ஸ்விஸ் நாட்டு பணத்தின் பெயர் ஸ்விஸ் பிராங்க் என அழைக்கப்படுகிறது.

## முக்கிய தினங்கள்

- **டிசம்பர் -9 சர்வதேச ஊழல் ஒழிப்பு தினம்**
  - 2003-ம் ஆண்டு முதல் ஐ.நா சபையால் டிசம்பர் 9-ஆம் தேதி சர்வதேச ஊழல் ஒழிப்பு தினமாக அறிவிக்கப்பட்டு கடைபிடிக்கப்பட்டு வருகிறது.
  - 2018-ம் ஆண்டு இந்தியா ஊழல் ஒழிப்பு நாடுகளின் பட்டியலில் 78-ஆவது இடத்தை பெற்றது.
  - டென்மார்க் முதலிடத்திலும், சோமாலியா 180-ஆவது இடத்திலும் உள்ளது.

## திருக்குறள்

**குறள் எண் : 42**

அதிகாரம் : இல்வாழ்க்கை

குறள் பால் : அறத்துப்பால்

குறள் இயல் : பாயிரம்

**துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்**



We Shine Academy™

**இல்வாழ்வான் என்பான் துணை.**

**விளக்கம் :** துறந்தவர்க்கும் வறியவர்க்கும் தன்னிடத்தே இறந்தவர்க்கும் இல்லறம் மேற்கொண்டு வாழ்கிறவன் துணையாவான்.

We Shine Academy™